ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

27.08.2026

1. ஞானச்சுடராகி வேலவன் தானும்
ஞான ஆட்சி பிரணவக் குடிலில்
ஞானபண்டிதனும் நடத்தி வர
நம்பிக்கை வைத்து உலகோர் வர

2. வருகவே ஞானமோடு பெருமைகளும்
வருமுலகில் அடைவீர் எனக் கூறி
ஆறுமுக அரங்கமகா ஞானி யானும்
அறிவிப்பேன் குருவார அருளாசியாக

3. ஆகவே பராபவ யாளி திங்கள்
அறிவிப்பேன் ஈராம் குருவார ஆசி
மிகைபட ஞானியர் படைகள்
மேலான வழிகாட்டி குடிலில் அருள

4. அருளவே கலியுக மக்கள் தானும்
அபயம் அபயமென வேண்டி வர
இருளெனும் அவரவர் கருமவினை
இன்னல்கள் யாவும் விலகியே

5. விலகியே பிறவி நோக்கம் தன்னை
விரைந்து அவரவரும் உணர்ந்து
ஞாலமதில் கடைத்தேற உண்டான
நல்வழி அரங்கன் என் வழியே என

6. என தெளிந்து இறுகப் பற்றி
எங்கும் பிற வழி அலையாமல்
ஞானவழித் தொடர நேரும்
நன்மை பயக்கும் அன்னதான சேவை

7. சேவைதனை ஏற்றும் இனிதே
செப்பிட அவரவரும் தருமவழி
அவணியில் பொருளுதவி செய்து
அடையாளம் தருமவான்களென அடைய நேரும்

8. நேருமைபட சன்மார்க்க வழியில்
நிலவுலகில் ஞானிகள் பூசையை

பெருமைபட நாளும் செய்து கொண்டு
புண்ணியபலம் தரும் அன்னதானத்தை

9. அன்னதானத்தை தொடர்ந்து செய்து
அரங்கன் யான் நடத்துகின்ற
அன்னதானத்தில் பொருள் உதவியே
அறப்பணியில் உடல் உழைப்பும் தந்து வர

10. வருகவே தேக மனபலமுடன்
வல்லமைமிக்க ஞானபலம் கூடி
முருகப்பெருமான் கடாட்சமுடன்
முழுமைபட கலியுகம் மாற்றும்

11. மாற்றும் ஞானிகளாக ஆற்றல்
மாற்றம் கண்டு தேறுவர்
ஆற்றல் தந்து சீடர்கள் யாவர்க்கும்
ஆவணி முழுமதியில் யானும் தீட்சை அருள்வேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி